DINAMALAR
15 APR 2022
PAGE 1

# தொடருமா?

**● 'கியூட்' தேர்வு அடிப்படையிலான சேர்க்கையில் இட ஒதுக்கீடு...**

**● பல்கலை., தெளிவுபடுத்த மாணவர்கள் எதிர்பார்ப்பு**

புதுச்சேரி, ஏப். 15–

**காலாப்பட்டில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்தில், 10 படிப்புகளுக்கு நடப்பாண்டு முதல் 'கியூட்' நுழைவுத்தேர்வு அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. இதில், மூன்று படிப்புகளில் புதுச்சேரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 25 சதவீத இட ஒதுக்கீடு தொடருமா என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.**

காலாப்பட்டில் உள்ள புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம், 1985ல் துவங்கப்பட்டது. இங்கு 6,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இப்பல்கலையில் அனைத்து படிப்புகளுக்கும் ஆண்டுதோறும் அகில இந்திய அளவில் தனியாக நுழைவுத்தேர்வு நடத்தி, மாணவர் சேர்க்கை நடைபெறும்.

இந்தாண்டு, இப்பல்கலைக்கழகத்தில், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளில் 10 பாடப்பிரிவுகளுக்கு மட்டும் 'கியூட்' நுழைவுத்தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.

இதற்கு, அடுத்த மாதம் 6ம் தேதிக்குள் https://cuet.samarth.ac.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். மற்ற படிப்புகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வு விரைவில் நடத்த உள்ளது.

இச்சூழ்நிலையில், ஏற்கனவே குறிப்பிட்ட படிப்புகளில் புதுச்சேரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 25 சதவீத இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

அதாவது, இப்பல்கலை., யில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளான எம்.எஸ்சி., அப்ளைடு ஜியோலஜி, இயற்பியல், கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புகளுக்கு நுழைவு தேர்வு நடத்தி, 25 சதவீத இடங்கள் புதுச்சேரி மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த மூன்று படிப்புகளும், இந்தாண்டு 'கியூட்' தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது. இப்படிப்புகளில் புதுச்சேரி மாணவர்களுக்கு இதுவரை வழங்கி வந்த 25 சதவீத இட ஒதுக்கீடு குறித்து எதுவும் அறிவிக்கப்பட வில்லை.

இதுகுறித்து இந்தாண்டுக்கான விண்ணப்ப தகவல் குறிப்பேட்டில் எதுவும் குறிப்பிடாததால் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் மாநில மாணவர்கள் தவித்து வருகின்றனர்.

## இட ஒதுக்கீடு பின்னணி

பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்ததற்காக, புதுச்சேரி மாணவர்கள் உயர்கல்வி படிக்கும் வகையில், 25 சதவீத இடங்களை ஒதுக்க மாநில அரசு கேட்டுக்கொண்டது.

அதன்படி, புதுச்சேரியில் மற்ற கல்வி நிறுவனங்களில் இல்லாத படிப்புகளில் 25 சதவீத இடம் வழங்க ஒப்புக் கொண்டு, 1997ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது.

பல்கலைக்கழகம் அசுர வளர்ச்சி கண்ட பிறகு, இட ஒதுக்கீடு முறை தடம்புரண்டு விட்டது. பல்கலைக் கழகத்தில் 60க்கும் மேற்பட்ட படிப்புகள் உள்ள நிலையில், 22ல் மட்டுமே இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

அதிலும் தற்போது 3 படிப்புகளில் இட ஒதுக்கீடு கேள்விக்குறியாகி உள்ளது. இப்படியே போனால் ஒவ்வொரு படிப்பாக புதுச்சேரி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டு விடும்.

இப்பல்கலை., யில் உள்ள படிப்புகளில் புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தெளிவான வரையறை இல்லை. வேலைவாய்ப்பு அளிக்கும் முக்கியமான படிப்புகளில் 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதில்லை.

உதாரணமாக, எம்.பி.ஏ., படிப்புகளில் வணிக நிர்வாகம், சுற்றுலா டிராவல் மேலாண்மை படிப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால், மற்ற எம்.பி.ஏ., படிப்புகளான காப்பீடு, சர்வதேச வணிகம், வங்கி தொழில்நுட்ப படிப்புகளில் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

எம்.டெக்., படிப்புகளில் கம்ப்யூட்டர் சயின்ஸ் இன்ஜினியரிங் படிப்பில் புதுச்சேரிக்கு இட ஒதுக்கீடு தரப்படுகிறது.

பிற எம்.டெக்., படிப்புகளான கிரீன் எனர்ஜி டெக்னலாஜி, ஜியோ சயின்ஸ், எலக்ட்ரானிக்ஸ் நானோ சயின்ஸ் போன்ற படிப்புகளில் இட ஒதுக்கீடு இல்லை.

இதனால், எந்த படிப்பிற்கு, ஏன் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது; மற்ற படிப்புகளில் ஏன் வழங்குவதில்லை என பல்கலைக் கழகம் தெளிவுபடுத்துவதில்லை.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து படிப்புகளிலும் 25 சதவீத இடஒதுக்கீடு வழங்க வல்லுநர் குழு அமைத்து வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும்.

இதனை ஆண்டு தோறும் வழங்க புதுச்சேரி அரசு அரசாணை பிறப்பித்து, நிர்ப்பந்திக்க வேண்டும்.

பல்கலையில் அனைத்து படிப்புகளிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு வேண்டும் என சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இத்தீர்மானத்தை, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பி, சிறப்பு உத்தரவு பெற்று, மாநில உரிமையை நிலை நாட்ட வேண்டும்.

கியூட் தேர்வு அடிப்படையில் நிரப்பப்பட உள்ள மூன்று படிப்புகளிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீட்டினை உறுதி செய்ய வேண்டும். விண்ணப்ப தகவல் குறிப்பேட்டிலும் இதனை இடம்பெற செய்ய வேண்டும்.

DINAMALAR

15 APR 2022

PAGE 4

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

**புதுச்சேரி, ஏப்.15–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சிறப்பு இட ஒதுக்கீடு பிரிவு சார்பில், அம்பேத்கர் 131வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இட ஒதுக்கீடு பிரிவு தொடர்பு அதிகாரி அருள் வரவேற்றார்.

துணைவேந்தர் குர் மீத் சிங் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அம் பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, பல்கலைக் கழக நுழைவு வாயிலில் அலங்கரிக்கப்பட்ட அம் பேத்கர் உருவப்படத்திற்கு மலர் துாவி மரியாதை செலுத்தப் பட்டது.

பல்கலைக்கழக இயக் குனர் தரணிக்கரசு, சிறப்பு அதிகாரி ராஜிவ் ஜெயின், பதிவாளர் அம்ரேஷ் சமந்தராய, நிதி அதிகாரி லாசர், நிர்வாக துணை பதிவாளர் சகாயராஜா, மக்கள் தொடர்பு பிரிவு உதவி பதிவாளர் மகேஷ், உதவி பதிவாளர் முருகையன் கலந்து கொண்டனர்.

மேலும், டீன்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரி யர் அல்லாதோர் சங்க நிர்வாகிகள், மாணவர்கள் பங்கேற்றனர்.



அம்பேத்கர் பிறந்த நாளையொட்டி புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள அவரது சிலைக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

THE HINDU (TAMIL)
15 APR 2022
PAGE 5

வழக்கமான ஆற்றல் வளங்களைச் சார்ந்திருக்காமல்

# சூரிய ஆற்றலுக்கு நாம் மாறுவது அவசிய தேவை

## ● சோலார் பேருந்தில் புதுச்சேரிக்கு வந்த மும்பை ஐஐடி பேராசிரியர் வலியுறுத்தல்

■ புதுச்சேரி

வழக்கமான ஆற்றல் வளங்களைச் சார்ந்திருக்காமல் சூரிய ஆற்றலுக்கு மாறுவது அவசிய தேவை என்று சூரிய ஒளியில் இயங்கும் பேருந்தில் புதுச்சேரிக்கு வந்த மும்பை ஐஐடி பேராசிரியர் வலியுறுத்தினார்.

'இந்தியாவின் சூரிய நாயகன்' என்று குறிப்பிடப்படும் பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்துக்கு நேற்று வருகை தந்தார். இவர், மும்பை ஐஐடி பேராசிரியர் பணியில் ஊதியம் இல்லாத விடுப்பில் உள்ளார். மத்தியப் பிரதேச அரசின் சூரிய சக்தியின் தூதுவராகவும், 'எனர்ஜி ஸ்வராஜ்' அறக்கட்டளையின் நிறுவனராகவும் உள்ளார்.

சூரிய ஆற்றலை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில், கடந்த நவ. 2020 முதல் சோலார் பேருந்து மூலம் "எனர்ஜி ஸ்வராஜ் யாத்ரா' என்ற பெயரில் மும்பையில் தொடங்கி நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு வருகிறார். இவர், வரும் 2030 வரை இந்த யாத்திரையில் இருக்க உள்ளார். சூரிய சக்தியை மக்கள் 100 விழுக்காடு ஏற்றுக்கொள்ளும் நோக்கில்




▲ முற்றிலும் சூரிய ஆற்றலில் இயங்கும் பேருந்தில் நாடு முழுவதும் 'எனர்ஜி ஸ்வராஜ்' யாத்திரையை மேற்கொண்டு வரும் ஐஐடி பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி.

இந்த யாத்திரை நடைபெறுகிறது.

இதற்காக, 'மொபைல் ஹோம்' என்ற பெயரில், முற்றிலும் சூரிய ஆற்றலில் இயங்கும் பேருந்தில் பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி பயணித்து புதுச்சேரி வந்தார். இந்த சூரிய ஆற்றல் பேருந்தில், 3.2 கிலோ வாட் சோலார் பேனல்கள் மற்றும் 6 கிலோ வாட் ஆற்றல் சேமிப்பு கொள்கலன் (சோலார் பேட்டரி) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதில் இன்வெர்ட்டரும் உள்ளது. பேருந்தில் விளக்குகள், குளிர்விப்பான், சமையல் அடுப்பு மற்றும் இதர சாதனங்கள் முற்றிலும் சூரிய சக்தியில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இப்பேருந்தின் தொழில்நுட்பத்தை பலர் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

தொடர்ந்து புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் பசுமை எரிசக்தி தொழில்நுட்பத் துறையில் சூரிய ஆற்றலுக்கான சாத்தியக் கூறுகள் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் புதுச்சேரி மத்திய பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் பேராசிரியர் சேத்தன் சிங் சோலங்கி பங்கேற்று பேசியதாவது:

வழக்கமான ஆற்றல் வளங்களைச் சார்ந்து இருப்பதை விட சூரிய ஆற்றலுக்கு நாம் மாறுவது அவசியமான தேவையாக உருவாகியுள்ளது. கடந்த 1950-க்குப் பிறகு, உலகளாவிய ஆற்றல் பயன்பாடு அதிவேகமாக வளர்ந்துள்ளது. அதில் 80 முதல் 85 சதவீதம் வரை புதைபடிவ எரிபொருட்களின் பங்களிப்பு உள்ளது.

தொழில்துறை வளர்ச்சிக்குப் பின்பு, உலக வெப்பமயமாதலை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் தேவை. வெப்ப அளவு குறிப்பிட்ட வரம்பை கடந்தவுடன், மாற்றங்கள் மாற்ற முடியாததாக இருக்கும்.

சூரிய ஆற்றலுக்கு முழுமையாக மாற, 'தவிர், சிறிதாக்கு, உருவாக்கு' என்ற 3 வகைகளை நாம் பின்பற்றலாம். சூரிய சக்தியாகவே இருந்தாலும் கூட, முடிந்தவரை ஆற்றலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

நீங்கள் ஆற்றலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியாவிட்டால், திறமையான சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும்.

3-வதாக உள்நாட்டில், சூரிய சக்தியைக் கொண்டு ஆற்றலை உருவாக்குங்கள். முதலில், உங்கள் நுகர்வைக் கட்டுப்படுத்துங்கள், உங்கள் உற்பத்தியை உள்ளூர்மயமாக்குங்கள் என்று தெரிவித்தார்.